முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (18.6.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் ச. விஜயகுமார், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (18.6.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வி. அமுதவள்ளி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழகத்திலும் – அரசு அமைப்புகளிலும் பல்வேறு பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியவர்

நெருக்கடி நிலையை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டவர் மிசா. இராமநாதன்!

தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

புதுக்கோட்டை, ஜூன் 19 -

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தலைமைக் கழகதீர்மானக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் மிசா இராமநாதன் அவர்கள் மறைந்த செய்தி அறிந்து வேதனையடைந்தேன்.

அறந்தாங்கியைச் சேர்ந்த திரு. இராமநாதன் அவர்கள் பள்ளிப் பருவம் முதலே கழகப் பற்றாளராக விளங்கி, காரைக்குடி அழகப்பா கல்லூரியில் படிக்கும் போதே மாணவர்களைத் திரட்டி மாணவர் தி.மு. கழகச் செயலாளராகப் பணியாற்றியவர் ஆவார். சென்னை சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் அவ்வளாகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையை நிறுவியதில் முக்கியப் பங்கு வகித்தவர் திரு. இராமநாதன் அவர்கள்.

1974ஆம் ஆண்டு ஆவுடையார்கோயில் ஒன்றியச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து

5 முறை பொறுப்பு வகித்த சிறப்புக்குரியவர். பூவலூர் ஊராட்சி மன்ற உறுப்பினராக 13 ஆண்டுகள் இருந்துள்ளார். செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் குழு உறுப்பினர் எனக் கழகத்திலும் அரசு அமைப்புகளிலும் பல்வேறு பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியுள்ளார்.

நெருக்கடி நிலையை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு திருச்சி மத்தியச் சிறையில் ஓராண்டுகாலம் தண்டனை அனுபவித்து 'மிசா இராமநாதன்' எனப் பெயர் பெற்ற தீரர். இவர் சிறைக்கைதி யாக இருந்த காலத்தில் இவரது இல்லத்துக்குச் சென்று தலைவர் கலைஞர் அவர்கள் மதிய உணவு உட்கொண்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தது குறிப்பிடத்தக்க நிகழ்வு.

இத்தகைய நீண்டகாலப் பொதுவாழ்வுக்குச் சொந்தக்காரரான திரு. மிசா இராமநாதன் அவர்களின் பணிகளைப் பாராட்டி கடந்த ஆண்டு சென்னை நந்தனத்தில் நடைபெற்ற கழக பவள விழா நிறைவு முப்பெரும் விழாவில் பேரறிஞர் அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்திருந்ததை இப்போது நினைவுகூர்கிறேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'எய்ம்ஸ்' கட்டுமானப் பணி! ஒன்றிய அரசின் கற்பனைக் காட்சி!

2 மக்களவைத் தேர்தல்கள் முடிந்த பிறகும் 'எய்ம்ஸ்' கட்டுமானப் பணிகள் முடியவில்லை!

வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூன் 19 -

மதுரை எய்ம்ஸ் என்ன ஆனது எனக் கேட்டதற்கு, அது தொடர்பான கற்பனைக் காட்சிகளை ஒன்றிய அரசு உருவாக்கி அளித்துள்ளது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமர்சித்துள்ளார்.

கடந்த 2019 ஜனவரி மாதம் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். ஆனால், இரண்டு மக்களவைத் தேர்தல்களுக்கு பிறகும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான கட்டுமானப் பணிகள் முடிக்கப்படவில்லை. தற்போது, 9 மாதங்களில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் முப்பரிமாண வீடியோவை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.

இது குறித்து சமூகலைத்தளப் பதிவொன்றை வெளியிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்கள், "மதுரைக்கு வந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் எய்ம்ஸ் என்ன ஆனது எனச் சென்று பார்த்தாரா? எனக் கேட்டிருந்தேன்,

அதற்குப் பதிலாக, இந்தக் கற்பனைக் காட்சிகளை உருவாக்கி அளித்துள்ளார்கள் 2026 தேர்தலுக்கு இந்த ஒரு வீடியோ போதும் என நினைத்துவிட்டார்களா? இதற்கே 10 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன" என்றும் பதிவிட்டுள்ளார்.

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை !

திருச்சி, ஜூன் 19-

திருச்சி தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (19.06.2025-வியாழக் கிழமை) காலை 08.30 மணியளவில் சத்திரம் பேருந்து நிலையம் வி.என். நகர், திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில்" மாவட்ட அவைத்தலைவர் என்.கோவிந்தராஜன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்

1. கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக உறுப்பினர் சேர்க்கையை 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பின்கீழ் ஒருங்கிணைத்தல் குறித்து.

2. BLA2, BLC பணிகள் குறித்து,

3.கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு பள்ளி கல்வித் துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு – (இரண்டு உறை) இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண்.	09/ கோ. அமைப்பு மைமம்/ முறிவஅ /தபொ / வே /2025 / நாள்:11.06.2025.
நிதி ஆதாரம்	த.கு.வ.வாரிய நிதி
ஒப்பந்தக்காரர் தகுதி	நிறுவனங்கள் சட்டம் 1956/2013 அல்லது கூட்டாண்மை சட்டம் 1932 அல்லது தனிநபர் உரிமையாளர் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு சட்ட நிறுவனம்
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர்	தலைமைப் பொறியாளர், த.கு.வ. வாரியம், வேலூர்–6.
ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் இணையதளம் மூலமாக	19.06.2025 முதல் 25.06.2025, 15.00 மணி வரை (as per server time)
இணையதள முகவரி	"https://tntenders.gov.in" (மின்னணு ஒப்பந்தம் முறையில்)
ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை	மின்னணு முறையில் இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக.
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம்	23.06.2025 அன்று மு.ப 11.00 மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ வாரியம், வேலூர் – 6.
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	25.06.2025 அன்று 15.00 மணி வரை மின்னணு ஒப்பந்தம் முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	26.06.2025 அன்று 15.30 மணிக்கு த.கு.வ. வாரியம், தலைமைப் பொறியாளர் அலுவலகம், வேலூர் மின்னணு ஒப்பந்தம் முறையில்

வ. எண்.	திட்டத்தின் பெயர்	பணியின் உத்தேச மதிப்பு (ரூ. கோடியில்) (ச.ம.சே.வரி 18% உட்பட.)	முன்வைப்பு தொகை (ரூ. இலட்சங்களில்)
1	தமிழ்நாட்டில் (சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து) நீர் வழங்கல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக த.கு.வ. வாரியம் மூலம் பொதுவான அமைப்பு மைமம் மற்றும் குறை தீர்க்கும் அமைப்பை நிறுவுவதற்கான முன் மொழிவு (RFP) கோரிக்கை [செயல்படுத்துதல் காலம்: 5 மாதங்கள், செயல்பாட்டு காலம்: 12 மாதங்கள்].	4.00	3.00

செ.ம.தொ.இ/ 3090 /ஒப்பந்தப்புள்ளி/2025 தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம் தலைமைப் பொறியாளர் (பொ), த.கு.வ.வாரியம், வேலூர்–6

மதுரையில் கழக மாணவரணியினர் ஆர்ப்பாட்டம்! ... முதல் பக்கத் தொடர்ச்சி

உரையில் தமிழர்கள் மீதும் தமிழ் நாட்டின் மீதும் பண்பாட்டுப்போர் கலாச்சார போர் தொடுக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு என்று தமிழர்களின் தொன்மையையும், வரலாற்றையும் திட்டமிட்டு மறைக்க முயற்சிப்பவர்களை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் என்று கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், கீழடி ஆய்வறிக்கையை வெளியிட வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கப்படும் என்றும், ஆய்வறிக்கையை வெளியிடும் வரை தங்களது குரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கும் என வும் உறுதிபட கூறினார்.

மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடபட்டி மு.மணிமாறன், தங்கதமிழ்செல்வன் எம்.பி., மாநில நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ. வேலுசாமி, பெ.குழந்தைவேலு, ஜி பி. ராஜா, இள. மகிழன், மாநில மாணவரணி துணை செயலாளர்கள், அதலை பி.செந்தில்குமார், பூர்ண சங்கீதா, மன்னை சோழ ராஜன், தமிழரசன் பி.எம்.ஆனந்த், கோகுல், வீரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, ஆ. வெங்கடேசன், செல்வகுமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர்கள், ஆதிசங்கர், துரை கோபால் சாமி (எ) அன்பு, பாண்டி முருகன் மற்றும் பல்லாயிரகணக்கான மாண வரணி நிர்வாகிகள் மாணவ -மாணவியர் கழக நிர்வாகிகள் கழகத்தினர், பொதுமக்கள் என்று பல்லாயிரவர் பங்கேற்று ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.

குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்! ... முதல் பக்கத் தொடர்ச்சி

9,000 லிட்டர் கொள்ளளவுள்ள HDPE சின்டெக்ஸ் டேங்குகளில் குடிநீர் சேகரிக்கப்பட்டு, அல்ட்ரா வடிகட்டிகள், கார்பன் வடிகட்டிகள் மற்றும் புறஊதாக் கதிர் மூலம் சுத்திகரிக்கப்பட்டு துருப்பிடிக்காத சில்வர் டேங்குகளில் சேகரிக்கப்பட்டு தானியங்கி இயந்திரங்கள் மூலம் பொதுமக்கள் 1 லிட்டர் மற்றும் 150 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட பாதுகாப்பான குடிநீர் பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தானியங்கி இயந்திரங்கள் அனைத்தும் நவீன IoT (Internet of Things) மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயல் முறையை இணைய அடிப்படையிலான செயலி மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் குடிநீர் அளவு குறையும் போது உடனடியாக பகுதி பொறியாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, தேவையான குடிநீர் நிரப்ப நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும். திருட்டு மற்றும் சமூக விரோதிகள் மூலமாக குடிநீர் இயந்திரங்கள் சேதப்படுத்தப்படுவதை தடுக்க அனைத்து நிலையங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டு சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் மூலம் கண்காணிக்கப்படும். இதன்மூலம் பொது மக்களுக்கு பாதுகாப்பான தடையில்லா சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், செயல் இயக்குநர் கௌரவ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் மதன் மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் புதிய விரிவான மினி பஸ் சேவை!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜூன் 19-

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி பேருந்து நிலையம், அண்ணாசிலை அருகில், பேருந்து வசதி கிடைக்கப் பெறாத இடங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய விரிவான மினி பஸ் சேவையை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் புதிய விரிவான மினி பஸ் சேவையினை தொடங்கி வைத்தார். அதன்படி அரியலூர் மாவட்டத்தில், அரியலூர் நகராட்சி பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் புதிய விரிவான மினி பஸ் சேவையினை தொடங்கி வைத்தார். இதன் மூலம் அரியலூர் மாவட்டத்தில் 886 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய மற்றும் நீட்டிக்கப்பட்ட வழித்தடங்களில் 31 மினி பஸ் சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

புதிய விரிவான மினிபஸ் சேவையினை தொடங்கி வைத்த பின்னர் அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்த தாவது:

தமிழ்நாட்டில் பேருந்து சேவை கிடைக்கப்பெறாத குக்கிராமங்களுக்கும் பேருந்துகள் இயக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில் புதிய விரிவான மினி பஸ் திட்டம் செயல்படுத்தப்பட்டு நேற்றையதினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தஞ்சாவூர் மாநகரில் புதிய விரிவான மினி பஸ் சேவை தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 2010 புதிய வழித்தடங்களில் பேருந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக குறைவான மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் உள்ள மக்களுக்கும் பேருந்து சேவை கிடைக்கப்பெற்றுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் 2 புதிய வழித்தடத்திலும். 29 நீட்டிக்கப்பட்ட வழித்தடத்திலும் 31 மினி பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் அருகாமையில் இருக்கின்ற நகரங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், பள்ளிகளுக்கு சென்றுவரும் வகையில் சேவை வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இயங்கி வந்த பேருந்துகள் 25 கி.மீ தூரத்திற்கு நீட்டிப்பு செய்து இயக்கப்பட உள்ளது.

கடந்த காலங்களில் சிறப்பாக செயல்பட்டு வந்த இத்திட்டமானது பிறகு கட்டண உயர்வு, மினி பேருந்துகளின் சிரமங்களை சரிசெய்யாததன் காரணமாகவும் மினிபஸ் சேவை பல இடங்களில் தொய்வடைந்தது. மீண்டும் இத்திட்டமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் புத்துயிர் பெற்று செயல்பாட்டிற்கு வந்துள்ளது. குறிப்பாக இத்திட்டமானது கிராம புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது. சென்னை மாநகரில் பேட்டரி பேருந்துகள் சேவை விரைவில் துவங்கப்பட உள்ளது. மேலும் இத்திட்டம் சிறப்பானதொரு திட்டமாக இருக்கும். காலநிலை மாறிவருகின்ற காரணங்களால் பொதுமக்களுக்கான பேருந்து சேவையில் தடை ஏதும் ஏற்படாமல் இருக்கும் வகையில் சென்னையில் மின் பேருந்துகள் விரைவில் இயக்கப்பட உள்ளது என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வட்டார போக்குவரத்து அலுவலர் அறிவழகன், சிற்றுந்து சங்க மாநில தலைவர் கொடியரசன், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட துணை செயலாளர்கள் சி. சந்திரசேகரன், லதா பாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, மா.அன்பழகன், கோ.அறிவழகன், ரெ.அசோகசக்கரவர்த்தி, ஆர்.கலியபெருமாள், தனவேல், இரா.அண்ணாதுரை மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.